# தேசிய கல்வி ஆணைக்குழு – ஆட்சேர்ப்பு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் கணக்காளர் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் பதவிகளுக்காக தகைமையுடைய இலங்கையின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. பொதுத் தகைகமைகள்

(i) விண்ணப்பதாரி சிறந்த நல்ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்ற நபராக இருத்தலாகாது.

(iii) கணக்காளர் - விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் திகதியில் 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (கொள்கை/ ஆராய்ச்ச/ தகவல்) - விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் திகதியில் 22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இந்த வயதெல்லை அரச அல்லது அரையரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது)

(iv) விண்ணப்பதாரி பதவிக்கு சாட்டப்படும் பணிகளை உரிய முறையில் பூர்த்திசெய்வதற்கும் நாடு முழுவதிலுமுள்ள எந்தப் பிரதேசத்திலும் வேலை செய்வதற்கும் அவசியமான உள மற்றும் உடல் நலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

02. சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்

இந்த பதவி நிரந்தரமானதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய நன்மைகளுக்கு உரித்துடையவர். நியமனம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று வருட காலம் தகுதிகாண் காலமாகும். பொதுத்துறைக்கு உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பிரயோகிக்கப்படும். குறித்த வெற்றிடங்கள் சேவையின் தேவைக்கு அமைவாக உரிய முறையின் கீழ் பூர்த்திசெய்யப்படும்.

03. பதவிக்கு உரிய விபரங்கள்

| | |
|---|---|
| 3.1 பதவி | **கணக்காளர்** |
| 3.1.1 சம்பளத் திட்டம் | 02/2016ம் ஆண்டு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக MM 1-1- 2016 (53,175 - 10X 1,375 - 15 X 1,910 - 95,575). |
| 3.1.2 தகைமைகள் | **<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள் கீழே 1 அல்லது 2 வது வகையீட்டில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.</u>**<br>(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ முகாமைத்துவம் அல்லது வணிகத்துறைகளில் ஒரு பட்டம்.<br>மற்றும்<br>பட்டத்தைப் பெற்றக்கொண்டதன் பின்னர் உரிய துறையில் ஒரு வருட சேவை அனுபவம்.<br>(ii) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்<br>மற்றும்<br>இடைநிலையைப் பரீட்சையைப் பூர்த்திசெய்ததன் பின்னர் உரிய துறையில் ஒரு வருட சேவை அனுபவம். |

| | |
|---|---|
| | **<u>உள்ளக விண்ணப்பதாரிகள் பின்வர் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.</u>**<br><br>(i) வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு உரிய தகைமைகள்<br><br>அல்லது<br><br>(ii) JM சேவை வகுப்பில் குறைந்தபட்சம் 5 வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் |
| 3.2 பதவி<br>3.2.1 சம்பளத் திட்டம்<br><br><br>3.2.2 தகைமைகள் | **நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ( கொள்கை / திட்டமிடல்)**<br>02/2016ம் ஆண்டு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக MA4-2016(37,970-755x10-930x15-1,135x5-65,145/-)<br><br>(அ) பின்வரும் பாடங்களில் (கல்வி, முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கணணி விஞ்ஞானம், கணிதவியல், நூலக விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், சமூகவியல்) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம்<br><br>(ஆ) மேலதிகத் தகைமைகள்.<br><br>(i) ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் அனுபவம்<br><br>(ii) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் கணணி மென் பொருள் பிரயோக அனுபவம்<br><br>(iii) ஆங்கிலத்தில் புலமை |
| 3.3 பதவி<br>3.3.1 சம்பளத் திட்டம்<br><br><br>3.3.2 தகைமைகள் | **நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (தகவல்)**<br>02/2016ம் ஆண்டு முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக MA4-2016(37,970-755x10-930x15-1,135x5-65,145/-).<br><br>அ) பின்வரும் பாடங்களில் (கல்வி, முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கணணி விஞ்ஞானம், கணிதவியல், நூலக விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், சமூகவியல்) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம்<br><br>(ஆ) மேலதிகத் தகைமைகள்.<br><br>(i) ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் அனுபவம்<br><br>(ii) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் கணணி மென் பொருள் பிரயோக அனுபவம்<br><br>(iii) ஆங்கிலத்தில் புலமை |

உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணபத்தை 10.11.2017 திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு, இலக்கம் 126, நாவல வீதி, நுகேகொட எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதவுறையின் இடப்பக்க மூலையில் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

பூரணமற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது அரச / அரச நியதிச்சட்ட (Semi government) சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் எனின் விண்ணப்பத்தை நிறுவன தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தற்போதுள்ள வெற்றிடத்தை பூர்த்தி செய்தல், பூர்த்தி செய்யாதுவிடுதல் அல்லது ஓர் பகுதியை மட்டும் பூர்த்தி செய்வதற்கான முழுமையான உரிமை கல்வி ஆணைக்குழுவிடம் உள்ளது.

எதிர்பார்க்கப்படும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

*கவனத்தில் கொள்ள வேண்டியது. – நிறுவனம் தற்போது இலக்கம் 126, நாவல வீதி, நுகேகொட எனும் முகவரியில் உள்ளதுடன், இதற்கு கிளைக் காரியாலயங்கள் கிடையாது.

இந்த அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும். வேறுபாடுகள் ஏதும் காணப்படின் சிங்கள மொழி மூலம் மேலோங்கியதாக அங்கீகரிக்கப்படும்.

பேராசிரியர் டபில்யூ.ஐ.சிறிவீர
தலைவர்
தேசிய கல்வி ஆணைக்குழு
இலக்கம் 126, நாவல வீதி,
நுகேகொடை